பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தா...

645/1-54

645

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, [stamp] 5—2—54 தளிர்-16

4 MAR 1954

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வாழ்வது என்றால் என்ன?

மக்களுக்கு நல்வினை, தீவினைகள் தொடர்ந்து நிகழ்வதற்கு அவர்கள் மனமும் சொல்லும், செயலும் காரணமாய் இருக்கின்றன. மனம் நினைத்து வினை தேடுகிறது, சொல் சிற்சில பேசி வினை தேடுகிறது; இவைகளில் செயலைவிடச் சொல்லும் சொல்லைவிட நினைப்பும் நுட்பமானவை, ஒன்றுக்கொன்று காரணமானவை. ஆதலால் செயலால் வரும் வினைகளைவிடச் சொல்லால் வரும் வினையும், சொல்லால் வரும் வினைகளைவிட நினைவால் வரும் வினையும் மேன்மேல் கடுமையானவை என்று அறியப்படும். அறியவே நினைவால் நேர்மையல்லாத நினைப்புகளை நினைத்துக் கடுமையான வினைகளைத் தேடிக்கொள்ளாமையே மக்களுக்கு அழகாகும்.

இவ்வாறு, முன்னை நல்வினையால் ஆக்கமும் தீவினையால் இழப்பும் உண்டாகும் வகையைத் தீரத் தெளிந்திருந்தால், கேடும் பெருக்கமும் முன்னே அமைந்து கிடந்தன என்று உணர்ந்து, இப்போது அதற்காக நெறிவழுவாமல் மக்கள் நடந்துகொள்வார்கள். ஓர வஞ்சனையாய் நடந்து வாழ்க்கையை மேலும் பாழ் செய்துகொள்ள மாட்டார்கள்.

நெஞ்சு தீயதை நினைக்கும் பொழுதே, அது கெடுதியைப் பின்னால் விளைப்பது திண்ணமானதால், தவறு என்பது தெளியப்படும். எனவே அந் நினைப்பு ஒருவனுக்கு அவன் கெடுவதற்கே முன் அறிகுறியாய் நிகழ்ந்ததென்பது தெளிவாயிற்று; அது தெளிந்தோர் உடனே தம்மைத் திருத்தித் கொள்ளுதல் சிறந்தது. அதாவது, நடுநிலையி லிருந்து மாறி நினையாதபடி, நினைவை நடுநிலைமையாய் நினைக்குமாறு செய்துகொள்ளுதல் நல்லது.

அப்படிப் பழகப் பழகப் பழ வினைத் தாக்குதலும் குறைந்து கொண்டே வரும். ஏனென்றால், கெடுதலின் அறிகுறியாய் இல்லாமல் நல்லதன் அறிகுறியாய் அது நிகழ்தலின் என்பது இவ்வாறு, தாமே திருந்தித் திருந்தி வாழ்க்கையில் வெற்றி பெற மக்கள் முயல்வதுதான் வாழ்வது என்பது!

கெடுவல் யான் என்பது அறிக,
தன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்

நடு ஒரீஇ அல்ல செயின்—நடுவு நிற்றலிலிருந்து வழுவித் தனது நெஞ்சம் நேர்மையல்லாத செயல்களைச் செய்யுமானால், கெடுவல் யான் என்பது அறிக—அச்செயலை ஒருவன் யான் கெடுவேன் என்பதன் முன் குறிப்பு என்று அறிந்து கொள்வானாக!

தன் நெஞ்சு செயின் என்றது, தன் நெஞ்சு நினைக்குமாயின் என்னும் பொருட்டு, என்பது, என்னும் முன் குறிப்பாக; அறிக, அறிந்து திருந்தி நடந்து கொள்க.

நினைப்பது செய்வதற்குக் காரணமாய் விடுதலின், நினைத்தலைச் செய்தலாகவே கருதி, அதன் பயன் இன்னதென்று குறித்தார்.

நடுநிலை வழுவிய நினைவும் சொல்லும் செயலும், தானே கெட்டுப்போவதற்கு அடையாளம் என்று தெரிவித்தலால், அறிவுக் கூர்மையும் முன் விழிப்புமுடைய ஒருவன் அதற்கு இடம் தாலாகாது என்பது கருத்து.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.



முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | விசய, தை, | தளிர் |
|---|---|---|
| 6 | 5-2-54 வெள்ளி | 16 |


## சமய அமைப்புகள்

"உலகம்போற்றிவந்த, நமது இந்துமதஸ்தாபனங்கள் சில்காலமாய்ச் சீர் கேடடைந்து வருகின்றதைப் பற்றி வருந்தாதார் இல்லை. சென்னை மாகாணத்தில் 27541 கோவில்களும், 288 மடங்களும் ஏராளமாக தர்மசத்திரங்களும், கட்டளைகளும், சொத்துக்களும் உடைய இது ஒரு மகா பெரியஸ்தாபனம். இதன்போர்டு அதிகாரிகளுக்குமட்டும் வருஷத்திற்கு 5½ லட்ச ரூபாய்க்குமேல் செலவழித்து வருகிறது, இவ்வாறு மதிப்பிலடங்காத நமது ஸ்தாபனங்கள் சீர் கேடடைந்து வரும் நிலை இதுவரை செம்மையாகச் சீர்திருத்தப்படவில்லை என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுவர். உதாரணமாக — இப்போது சுற்றுப்பிரயாணம் செய்து எல்லாக் கோவில்களையும் பார்வையிட்ட அறநிலையக் கமிஷனர் ஸ்ரீ. டி. கே. சங்கரவடிவேல் பிள்ளை அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது அவர்கள் நமது கோயில்கள் விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாக இருந்தும் நெடுங்காலமாக இவை புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன, பெரும்பாலான கோயில்கள் சிதலமாகக்கிடக்கின்றன. கடவுள் அழகுஸ்வரூபமென்பதும் ஒளி மயமென்பதும் ஹிந்துக்களின் கருத்து. ஆனால் கடவுள் கோயில்கள் அசுத்தமாகவும் இருள் சூழ்ந்தும் காணப்படுவது வருந்தத்தக்கது.

சுகந்தலைக் கோயில் பாழடைந்து கிடக்கிறது. அங்கு இணையற்ற அழகுடன் விளங்கும் விஷ்ணு விக்கிரகத்தைக் கவனிப்பாரில்லை. அங்குப் பூஜை நடைபெறுவதில்லை, பல கோயில்களில் வரிசை வரிசையாக விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் ஏற்றினால் அற்புதக் காட்சியாக விளங்கும், ஆனால் இவைகள் மாதக் கணக்கில் சுத்தம் செய்யப்படக்கூட இல்லை. கோயில்கள் பல பாகங்கள் இயற்கை ஒளி இல்லாமல் இருண்டுகிடக்கின்றன என்றும், கோயில்மரியாதைகளைக் கோயிலுக்கு வெளியே கொண்டுவரும் பழக்கத்தையும் கண்டித்து இது பக்திக் குறைவான காரியமென்றும் கூறினர்.

கோவில்களுக்கு வருபவர்களைத் திருப்தி படுத்துவதற்காக, சுவாமிக்குச் சாத்தப்பட்டுள்ள மா[illegible] இவர்களுக்குப் [illegible] கண் [illegible] பிரசாதம் [illegible] பெற்றுக்கொள்ளு[illegible]ம் பக்தி இருக்கவேண்டுமென்று வெறும் பெருமையாக இதைச் செய்யக் கூடாதென்றும் கூறினார்."

இது சென்னை மாகாண அகில இந்து மத ஸ்தாபனங்கள் பாதுகாப்புப் பிரசார சபையின் வேண்டுகோள்; திரண்டு கூட்டு முயற்சியாய்க் கவனிப்பது மிக்க பயன் தரும் என்பதை இக்காலத்தில் அனைவரும் அறிவர். இம்முயற்சியும் கட்டாயமானது; ஆகலால், சமயத் துறையில் அக்கறையுள்ள அனைவரும், அத்துறையில் சிறந்து நிற்கும் குருமார், திருக்கோவிலார், கழகத்தோர் முதலிய எல்லாரும், ஊக்கமுற்று வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுதல் நலம்.


Phone 5503 4 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

## குருகுலச் செய்தி

# அன்புடைமை

(அதிகாரச் செய்கை)

விளக்கம்:

அன்பு என்பது அதனை உடையாரிடம் கண்ணீர்த் துளிகளாகவும் வெளிப்படும். உயிரையும் விடும்படி பிறர்க்காக உழைக்கச் செய்துவிடும் தன்மையுடையது. அன்பென்பது உயிரின் இயல்பு; உடம்போடு கூடிப் பிறந்தது. அந்த உயிருணர்வு நன்கு இயங்குவதற்காகத்தான். ஆர்வத்தால் அன்பு பிறந்து அன்பினால் நட்பு வளரும். உலகத்தில் உண்டாகும் இன்பம் எல்லாம் இந்த அன்பினால் விளைவனவே; அன்பு தூய்மையை உண்டாக்கும்; வீரத்தையும் பெருக்கும். இடர்களைக் கடக்கவும், உலகத்தில் நிலை பெறவும், ஒறுப்பிலிருந்து தப்பவும் அன்பு உதவி செய்யும். வாழ்க்கைக் கடமை அன்பு கொடுக்கும். உடம்புக்கு உறுப்புகள் எவ்வளவு இன்றியமையாமையோ அவ்வளவு உயிர்க்கு அன்பு இன்றியமையாதது. உயிர் வாழ்க்கைக்கு அன்பை ஓர் உறுப்பென்று கூறிவிடலாம். உடம்பில் உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளம் அன்பு இருப்பதுதான் அன்பினால் ஆயுள் பெருகும். உடல் மன அறிவு நலங்கள் தழைக்கும்.

நீதிகள்:

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்!

2. அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்.

3. அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

4. ஆர்வம் உடைமை அன்பு ஈனும்.

5. அன்பு ஈனும் நண்பு என்னும் நாடாச் சிறப்பு.

6. அறத்திற்கு அன்பு சார்பு.

7. மறத்திற்கும் அன்பே துணை.

8. அன்பிலதனை அறம் காயும்.

9. என்பிலதனை வெயில் காயும்.

10. அன்பில்லா உயிர் வாழ்க்கை வற்றல் மரம் தளிர்த்தற்று.

11 யாக்கைக்கு அகத்துறுப்பு அன்பு

12. அன்பின் வழியது உயிர் நிலை.

கருத்துக்கள்:

1. அன்புணர்ச்சியை அடக்குதல் இயலாது. மக்கள் கண்ணீர்த் துளிகளையேனும் சிந்தித் தம் அன்பைப் புலப்படுத்திக் கொள்வர்.

2. அன்பு தன்னலமற்ற தன்மையை உண்டாக்கும். உயிரையும் பிறர்க்கு வழங்கத்தகும் பேருணர்வினை உண்டாக்கும் ஆற்றல் உடையது. அன்பில்லாதவர்களே எல்லாம் தமக்கு என்னும் எண்ணத்தோடு முயன்று கொண்டிருப்பார்கள். அந்த மாசு படியாதபடி பிறர்க்கென முயலும் தூய முயற்சிகளை அன்பு உண்டாக்கி விடும். ஒருவர்க்கு அன்பு உண்டா இல்லையா என்பதை இவ்வழியாகக் கண்டு கொள்ளலாம்.

3. உயிருணர்வாகிய அன்பு, தொடர்புடைய சார்புகளின் வழியாக இயங்கும் இயல்புடையது. அத்தொடர்புக்காகத்தான், அன்பின் தழையும் இயக்கத்திற்காகப் பிறவி உண்டாகிறது.

4 உயிரறிவின் கனிவைத் தொடக்கத்தில் ஆர்வம் என்று கூறலாம். அது நன்றாய்ப் பண்பட்ட பிறகு அதனை அன்பென்று சொல்லலாம். அது இயங்கும் ஆற்றலும் உடையதாகிச் செயல்படுகின்ற காலத்தில் அது நட்புணர்வு என்று சொல்லப்பெறும். உயிரறிவின் கனிவு இவ்வளவுக்கு முற்றி நிறைவடைந்தால்தான் அரும் பெருஞ் சிறப்புகள் உலகத்தில் உண்டாகும்.

5. அன்பின்றி இன்பம் இல்லை. அன்பினால் விளையும் இன்பமே இன்பம் என்பதற்கு உரியது. மற்றவை முடிவில் துன்பம் விளைக்கும் மயக்கங்கள்.

6. அன்பை அடிப்படையாகக் கொண்டு செய்யும் செயல்களே 'தொண்டு' எனப்பெறும். கண்டிப்பிலும் ஒறுப்பிலும் பிரிவிலும் கூட அடிப்படையில் அன்பு நிழலாட வேண்டும். ஒரு காரியத்தை நிறைவேற்றும் ஈரமும், தீமைகளோடு போராடி நன்மைகளைக் காத்து நிற்கும் தீரமும் அன்பினால் விளைவனவே.

7. அன்பை 'ஈரம்' என்றும் சொல்லலாம். இயற்கையின் நெறி, அன்பில்லாத இடத்தில் வெதும்பித் தெரியும். செய்கைகள், அன்பில்லாதவரிடத்தில் வறட்சியாயிருக்கும். அன்பிலார் செய்கைகளை இயற்கை தழைய விடாது. அன்பில்லாதவருடைய உடல் மன அறிவு நிலைகள் இனிமை இல்லாதனவாய், அமைதியற்ற கொந்தளிப்பு உடையனவாய் உலர்ந்து போம்.

8. அன்பிலாதார் வாழ்க்கை வாழ்க்கையே அன்று. அத்தகை

யோரும் உண்டு உடுத்துக் கவலை இல்லாமல் உரிய சூழல்களுடன் உலகில் உலவுகிறார்களே என்றால், அது வலிய காட்டு நிலங்களில் உலர்ந்து போன மரம் எங்கும் பெய்யும் மழை அங்கும் சிறிது பெய்தால் ஏதோ ஒரு பாகம் தளிர்த்து நிற்பதை ஒக்கும். பொதுவில் மழை பெய்யாவிட்டால் அந்த மரத்திற்கு ஏதும் கதி இல்லை. அதுபோல, இறைவனது பொதுமை அறத்தால் அன்பிலாதாரும் ஏதோ உயிர் வாழ்வதுபோல் ஓரளவு உலவி வருகின்றனர்.

9. அன்பு ஆடம்பரமாய் மேலே நிகழ்வதன்று. உள்ளத்தே உண்மையாய் நிகழ்வதற்குரியது. உறுப்புபோல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது அது. புற உறுப்புகள் நன்றாக இயங்குவதற்கு அகத்துறுப்பு என்னும் இந்த அன்பே ஆற்றல் தரும். உள்ளே அன்பில்லாமல் புறத்தே உறுப்புகள் செய்யும் செய்கைகள் நெறி தப்பித் தீமையிலும் இழுத்துச் சென்றுவிடும். அன்பு யாவரையும் அந் நிலையிலிருந்து காப்பாற்றி நல்லன பயப்பிக்கும்.

10 அன்புள்ளவர்களையே உலகம் உயிர் உள்ளவர்களாக மதிக்கும்; அல்லாதவர்களைப் பிணமென்றே பழிக்கும். உயிரியக்கம் எனினும் அன்பு எனினும் ஒக்கும்.

செய்கைகள்:

1. பிற அதிகாரக் குறள்களைப் போலவே இவ்வதிகாரக் குறள்களையும் குருகுலத்திலும் உலகத்திலும் பரவச் செய்யும் பல்வேறு முறைகளிலும் பரவச் செய்ய வேண்டும்.

2. வரலாற்றிலும் ஏனைய நூல்களிலும் காணப்படும் அன்பின் நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டி உணர்ச்சி ஊட்டலாம். இல்லறத்துக்கு அன்பு அடிப்படையாதலின் அன்புணர்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளை இல்வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தே எடுத்துக் காட்டுவது சிறப்பு.

3. அன்பு, வாழ்க்கையில் ஒரு காந்த உணர்ச்சி போன்றது. அன்பை உடையார்க்காக எல்லாம் இழந்து விடும் அரிய நிலைகளை, அவற்றின் அருமைகளை, நுணுக்கமாக விளக்கி, எடுத்துக்காட்டுகளுடன் படங்களுடன் உணர்ச்சி ஊட்டிப் பரவச்செய்ய வேண்டும்.

4. அன்பினால் பற்றற்று நிற்கும் பரவச நிலைகளுக்கும், அறியாமையால் ஏமாந்து இழந்து நிற்கும் அவல நிலைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் உலகத்துக்கு நன்கு தெரியும்படி விளக்க வேண்டும். அன்புடையார் உருவ வேறுபாடுகள் செயல் வேறுபாடுகள் முதலிடவற்றை விளக்கும் இலக்கியச் சுவை மொழிகளை நிரம்பத் தொகுத்துத் தெளிவான விளக்கங்களுடன் உருவப் படங்களுடன் பல்கோடிக் கணக்காகத் துண்டு வெளியீடுகளை வெளியிட்டு வர வேண்டும்.

5. ஆர்வம் அன்பு நண்பு என்பவற்றின் வேறுபாடு தோன்ற அவற்றை உடைய நல்லோரின் செய்கை நடத்தை போக்கு முதலியவற்றோடு இணைத்துத் தெளிவுபடுத்தி வர வேண்டும்.

6. அன்பைப் பற்றி எழுகின்ற ஐயங்களுக்கும், அன்றாட வாழ்க்கையின் சிக்கல்களுக்கும் தகுந்த விளக்கமும் விடையும் கண்டு வரவேண்டும்.

7. அறம் என்னும் ஓர் இயற்கை ஒழுங்கு வாழ்க்கையில் உயிர்ப்புடன் இயங்கி வருதலைத் தெளிவாக எடுத்துக்காட்டி அதற்குக் கீழ்ப்படிந்து நடத்தலின் இன்றியமையாமையும் புலப்படுத்தவேண்டும்.

8. அன்பில்லாதவர்களை அன்புடையவர்களோடு தக்கவாறு பழகி வருமாறு செய்யும் பணியை இயக்கி வரவேண்டும்.

9. அன்புக்கும் அருள் முதலிய பல பண்புகளுக்கும் உள்ள வேறுபாடுகளை இலக்கண வரம்புகளுடன் சான்றோர் மரபுகளுடன் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் தெளிவு படுத்தி அன்பின் நிலைக்கு உரிய இடத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

10. செடி கொடிகளின் அன்பு, ஊர்வன பறப்பன நடப்பன முதலிய சிற்றுயிர்களின் அன்பு, மக்கள் அன்பு, தேவர் அன்பு முதலியனவும், நாட்டன்பு மொழியன்பு முதலியனவும், கடவுள் மாட்டு அன்பு, கணவன் அன்பு, பெற்றோர் அன்பு, ஆசிரியர் அன்பு, அரசன் அன்பு போலும் நிகழ்கின்ற பல்வேறு அன்பின் இனங்களும் பிரிவு தோன்ற நன்கு விளக்கப்படுவதுடன், கூடிய வரையில் அவரவரை அந்த அந்த அன்பில் நிலைபெறுத்தும் முயற்சிகளையும் செய்து வரவேண்டும்.

Telegrams: "RAMBROS"

**N.Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

11. இவ்வகையில் புதிய அன்புலகத்தையே படைப்பது போல, எழுத்து மேடை காட்சி ஏனை நிகழ்ச்சி முதலியவற்றினோடு பணி செய்து வர வேண்டும்; அவற்றிற் கேற்ற உறு கதைகள் நாடகங்கள் முதலிய இலக்கியங்களையும் படைக்க வேண்டும்.

12. கடமையில் உறுதியாய் இருப்பதுடன் அன்பாய் இருக்கும்படி ஒவ்வொரு துறையிலும் கவனிக்க வேண்டிய பொறுப்பு இந்த அதிகாரச் செயல் உரிமையாளர்க்கு உரியது. தமிழில் அன்பில்லாமலே தமிழ்க்குப் பணி செய்வார்போல் தோற்றுதலும், நாட்டில் அன்பில்லாமலே நாட்டுக்குப் பணிசெய்வார் போல் தோற்றுதலும் போன்ற ஊழல்களை நீக்கி உண்மை நிலையில் அவரவர் நிலையை நிறுத்தி இயக்குதற்குரிய நன்முயற்சிகளைச் செய்து வர வேண்டும்.

13. மக்களின் உறவே அவரிடையில் இயங்கும் அன்பின் அடிப்படையில் இருத்தலால், என்றும் எங்கும் அது பிறழாதபடி காத்து வரல் வேண்டும்.

14. மாறுபட்ட தீயோரையும் மெல்ல மெல்ல அன்புணர்வால் மாற்றித் திருத்தும் முயற்சிகளை நேரிடைப் பயிற்சியால் செய்து புலப்படுத்துதல் வேண்டும்.

15. இறைவன்பால் அன்பு குறைந்து வரும் காலங்களில் அதனை நிறைவாக்கவும், அவ்வன்பு நேரிய முறையில் உலகில் நிகழவும் காத்து வர வேண்டும்.

16. அன்புணர்ச்சியின் முடி போல நண்பு இருப்பதனால், நண்பரைப் பலராகப் பெருக்குவதற்கும்: அதனால் காரிய வெற்றி குடும்ப வாழ்க்கை உண்டாதலுக்கும் வழிகள் கோல வேண்டும்.

17. யார் யார், யார் யாருக்கு நண்பர் என்பதற்குத் தக்கோர் சிலரின் பட்டியல் எடுத்து, அவரவர் அதனால் உறும் நன்மைகளையும் நிகழ்ச்சிகள் படங்களுடன் விளக்கி வர வேண்டும்.

18. விஞ்ஞான முறையில் அன்புடையாரின் மனோ நிலை இரத்த நிலை அவர் சூழல் நிலைகள் முதலியவற்றை நன்கு விளக்கிப் பொருட் காட்சிகளில் நிறுவி, அன்பின் மேன்மையைப் பரவச் செய்து வரவேண்டும்.

19 சித்துப் பொருளின் காந்த ஆற்றலாக அன்பு இருத்தலையும் எழுதலையும் விஞ்ஞான முறைகளால் விளக்க வேண்டும்.

20. பகையின்றி அன்புடன் ஒற்றுமையாக இயங்கி வாழும் குடும்பங்கள் நாட்டு அமைப்புகள் பலவற்றிற்கும் தொடர்பு வைத்துக்கொண்டு அவற்றிற்கு மேன்மேல் ஊக்கம் அளிப்பதுடன் தகுதியான காலங்களில் பரிசும் அளித்து வர வேண்டும்.

21. பிரிந்த அன்பினரின் நிலைகளிலிருந்து அன்பின் இயல்புகளை நன்கு அறிந்து விளக்கலாம். பிரிந்த அன்பர்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு, அவர்கள் அன்பு இன்ப வாழ்க்கைக்குத் துணை செய்ய வேண்டும்.

22. துயரத்தில் உழலும் உயிரினங்களைக் கரையேற்றி வாழச் செய்யும் அன்பின் பணிகளுக்கு அளவில்லையாதலின், இயன்ற துறைகளில் எல்லாம் மேற்கொண்டு நன்மை புரிய வேண்டும்.

23. இல் வாழ்க்கை என்பதே அன்பு செய்தல். ஆதலின் ஆதரவற்றுத் துணையற்றுத் தவிப்பவர்களையும், ஒரு காரியத்தில் ஊக்கமுற்று உதவிக்கு விளிப்பவர்களையும் இவ்வாறு அன்பின் பணிகளால் கவா வேண்டும்.

24. கன்றுக்குப் பால் தரும் ஆனின் நிலை, வேள்விக்குச் செல்லும் ஆட்டுக்குட்டியை அணைத்து நிற்கும் புத்தரின் நிலை, பிணியாளர்க்கு உதவி நிற்கும் மருத்துவ நிலை, காணமற் போன குழந்தையைக் கண்டு வாரி எடுத்துக்கொள்ளும் தாயின் நிலை, அறிவின் தாகமுடன் அணுகி நின்ற மாணவர்க்கு ஞான உதவி புரியும் ஆசிரியரின் நிலை, இரை தேடிக் குஞ்சுகளுக்கு ஊட்டும் தாய்ப் பறவையின் நிலை, கன்று ஈன்று அதனைச் சுற்றிச் சுற்றி வரும் ஆனின் நிலை, பிறர் குற்றத்தை மன்னித்து அவர் அறியாமைக்கு இரங்கும் பெரியோர் நிலை, அவ்வாறு இரங்குதலுடன் அவர் துயரத்தைத் தாமே ஏற்றுக் கொள்ளும் சான்றோர் நிலை, துயரத்தை மட்டுமன்றி அறியாமையால் அவர் செய்யும் ஒறுப்புகளையும் ஏற்றுப் பரிவு கொண்டு இரங்கும் ஏசுவைப் போன்றோரின் நிலை போன்ற எத்தனையோ வகையான அன்பு ஒளிவிடும் நிலைகளை எல்லாம் வகை வகையாக விளக்கப் படங்களுடன், வரிசையாக விளக்கிச் சிறந்த அன்புணர்ச்சியை எங்கும் பரவச் செய்து வர வேண்டும்.

# * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.

(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

## அதிகாரம் 15.

## வழிபாடு

அஃதாவது, மனம் தனிமையும் அமைதியும் எய்திய பின் ஒருமையுறுதலின் அவ்வொருமையினால் ஆற்றுதற்குரிய வழிபாட்டது மாண்பு கூறுதல்; இடையிலே எழும் ஐயம் என்னுங் களை நீக்கினாலன்றி மனம் ஒருமையுற்று வழிபாடு கொள்ளாதாகலின் ஈது ஐயத்தின் பின் வைக்கப்பட்டது.

1. வேண்டிய வேண்டியாங்
கெய்தி வழிபடுக
வேண்டாமை வேண்ட வரும்.

வழிபடுதலால் இருமைக்கண்ணும் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெற்று மேல்மேலும் வழிபட்டு வருக; அவ் வழிபாடு அவாவாமையை விரும்பத் தானே உண்டாகும்.

எய்தி யெனக் காரியத்தைக் காரணமாகவும், இறந்த காலத்தானுங் கூறினார், எய்துதல் உறுதி யென்பது தேற்றுதற்கு. வழிபாடென்பது முதல்வன் அருள் வழி நிற்றலாகலின் அவற்குரிய நன்னிலைகளெல்லாம் இருமைக்கணணும் எய்துதல் அதனால் இயல்பாயிற்று. பற்றற்ற நிலையிற் புரியும் வழிபாடே அப்பயனைச் செய்தலால், அது 'வேண்டாமை வேண்ட வரும்' என்றார். இதனால் வழிபாட்டின் நன்மை கூறப்பட்டது.

2. வழிச்சென்று வன்மை
பெறுதியோ நெஞ்சே
வழிபாடே இல்லாக் கடை.

வழிபாடே மேற்கொள்ளப் படாதவிடத்து, நெஞ்சமே நீ மெய்ந்நெறியி லொழுகி அருள் வலிமை பெறுவையோ? பெறாய் என்றார். இது வினாவே செப்பாயிற்று. ஏகாரம் பிரிநிலை. வழிபாடே மெய் வழியில் உய்த்து வன்மை பயக்குமென்றார்.

3. கொழுகொம்பொன்
கொடிபோலும் எற்ற[றில்லாக்]
வழிபாடு பற்றா மனம்.

பொருந்திய வழிபாட்டினை மேற்கொள்ளாத உள்ளம் தனக்காதரவாகப் பற்றுதற்குரிய கொம்பொன்று பெறாத பசுங் கொடியை ஒக்கும்.

வழிபாட்டின் உறைப்பினால் உள்ளம் உயர்தலானும், அவ்வாதரவில்லாதவிடத்து அது தளர்ந்து தன் வலி கெடுதலானும் இவ்வாறு கூறினார்.

4. வழிபாடு பற்றின்
வழிச்சென்று சேர்வர்
கலங்கார் கவர்நெறியுட்
பட்டு.

வழிபாடென்னும் ஓர் ஆதரவைப் பற்றி யொழுகினால் அவ்வாதரவின் வழியே உயர்ந்து மேனிலையை எய்துவர்; இடையே பிளவு நெறியிற் சிக்கி நிலை தளரார்.

கவர் நெறியாவது நெறியல்லா நெறி; முதல்வனாகிய ஒரு பொருளில் ஒருமை கொள்ளவின்றிக் கரணங்கள் புலன்களாகிய பல பொருள்களிற் பிரிந்து செல்லும் வேற்றுநெறி; கவர்தல் பிரிதலென்னும் பொருட்டு. "நெறி கவர்க்கும்" (சிலப்) என்றார் பிறரும். பன்னெறிகளிற் சிக்கியுழலுவான் தளர்தல் இயல்பாதலின், அவ்வாறு சிக்காதார் கலங்காராயினர்.

5. எனைத்தானும் சென்றார்
வழிபாட்டுள் மீள்வர்
அனைத்தானும் ஆற்றல் மிக.

எவ்வளவு சிற்றளவிலேனும் வழிபாட்டின்கண் ஒழுகினார், அவ்வளவிற்காகவாதல் அருளாற்றல் பெருகித் தீ நெறியினின்றுந் திரும்புவர்.

எனைத்தானும் அனைத்தானுமென்பன இப் பொருளவாதல், "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்றபெருமை தரும்" என்னும் திருவள்ளுவர் செம்மொழியினும் பெறப்படும். மிக்கென்பது மிகவெனத் திரிந்து நின்றது, செய்யுள் விகாரம். எட்டுணை நிகழ்ச்சிக்கும் பயன் உண்டாகலின் இவ்வாறு கூறினார்.

6. உட்டெளிவும் உட்கனிவும்
ஊறும் வழிபாட்டின்
உண்டோ உலவா நெறி.

அகத் தெளிவும் அகக்கனிவும் சுரத்திற்கேதுவான வழிபாட்டைப்போல ஓர் அழியாப் பயிற்சி நெறி உலகத்தில் வேறு உண்டோ?

உட்டெளிவு, உட்கனிவுகட்கு மேற்பட்ட பிறவி மாட்சிமை இன்மையின் அவற்றை எளிதிற் பயப்பிக்கும் வழிபாடு ஒப்பற்ற நெறியெனவும், அந் நெறிச் சென்றோர் இடை முறியாது முடிநிலை எய்துதல் உறுதியாகலின் உலவா நெறி யெனவும் ஓதப்பட்டது. அழியாமை பயக்கும் நெறி அழியா நெறி எனப்பட்டது.

7. உண்ண வளரும்
உடலே; வழிபாடு
நண்ண வளரும் உயிர்.

உடல் உணவு உட்கொள்ளச் செழிக்கும். அதுபோல உயிர் வழிபாட்டினைப் பொருந்தியொழுகச் செம்மைபெறும். உணவு பண்டமாகலானும், வழிபாடு நினைவுப் பயிற்சியாகலானும், செழிப்புக்குஞ் செம்மைக்கும்

முறையே உவமை, இன்றியமையாமை புலப்படுத்திற்று. இவை ஆறுபாட்டானும் வழிபாட்டின் இன்றியமையாமை கூறினர்.

8. ஒன்றோ வழிபாடும்
உற்றார் மன நலத்தின்
ஒன்ற அமைவ பல.

வழிபாடென்பதும் ஒன்றோ, அன்று; அதனை எய்தினர் மன நலத்தோடு பொருந்த அமைவனவாய் அது பல திறத்ததாம். ஓகாரம், எதிர்மறை. மன நலத்தின் ஏற்றத் தாழ்விற்கேற்ப அவரவர் கொள்ளும் வழிபாட்டு வகை பலவாதலின் இங்ஙனங் கூறினர். கடவுள் வழிபாடு, தேவ வழிபாடு, குரு வழிபாடு, உருவ வழிபாடு, அருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, அக வழிபாடு, புற வழிபாடு, அன்பு வழிபாடு, பயன் கருதிய வழிபாடு, முதலாக வழிபாடு பலவாதல் ஈண்டு நினைவு கூரப்படும். அமைவ, முற்றெச்சம். இதனான் வழிபாடு பலவாதலின் காரணங் கூறினர்.

9. மொழிவர் பலவாறு
முற்றுணரார், காணின்
வழிபாடு பற்றார் இலர்.

வழிபாட்டைப் பற்றி நன்குணராதார், பலவாறு பேசுவர்; எண்ணிப் பார்த்தால், வழிபாட்டினை மேற்கொள்ளாதவர் யாரும் இல்லை.

வழிபாடு வாழ்க்கைக்குத் தேவையில்லை என்றும், வழிபாட்டால் மாந்தர்க்குக் கட்டன்றி விடுதலை இல்லையென்றும், முதல்வன் வழிபாடென்பது வழக்கங் காரணமாக நேர்ந்து விட்டதொரு குருட்டுப் பழக்கமென்றும், முற்றுணரார் பலவாறு பேசுதலின் 'மொழிவர் பலவாறு' என்றார். ஆயினும் மக்களனைவரது வாழ்க்கையொழுக்கமும் தம்மிற் பெரியாரொருவரைச் சார்ந்தே நிற்றலின் 'காணின் வழிபாடு பற்றார் இலர்' என்றுங் கூறினர்.

10 வழிபாடகற்ற
வழியுண்டோ? இல்லை
அழிப்பாரும் யாரும் இலர்.

வழிபாட்டினை வாழ்க்கையினின்று நீக்க வழியுண்டோ? இல்லை; அதனை உலகில் இல்லையாகச் செய்வாரும் யாரும் இல்லை 'என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ' எனத் தாயுமானாரும் கூறுதலின், அவ்வழிபாடு இயல்பாகவே மாந்தருணர்வில் உள்ளதாய் எஞ்ஞான்றுஞ் செயல் கொள்ளலின், 'அகற்ற வழியுண்டோ' என்றும், 'அழிப்பாரும் இலர்' என்றுங் கூறினர். இவையிரண்டு பாட்டானும் வழிபாட்டின் [illegible] கூறப்பட்டது.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விடும். எவ்வளவு கொடியவினையாயினும் அத்தகைய வேளையில் எதிர்ப்படுமாயின் அவற்றுக்கு பயன் கொள்ள மாட்டோம். நாம் பயப்படுவதற்குப் பதிலாக அந்த வினைகளே வந்து பார்த்துவிட்டு பயந்து ஓடும். இந்த உண்மையை சேக்கிழார் அரிவாட்டாய நாயனர் புராணத்தில் தெரிவிக்கிறார்.

அரிவாட்டாய நாயனர் என்பவர் இறைவனுக்கு தினந்தோறும் செந்நெல் இன்னமுதுச் செங்கீரை மாவடு இவற்றைப் படைக்கும் திருப்பணி மேற்கொண்டவர் இவர் இத் திருப்பணியிலீடுபட்டிருக்கையில் அவர் வினைகள் கழியலாயின, அவருக்கு வறுமை வந்தது அக் கொடிய வறுமையினும் தம் திருப்பணி விடாராய்த் தொடர்ந்து செய்தவரை ஒரு நாள் அச்செயலுக்கு வினை காரணமாக இடையூறு நேர்வதாயிற்று. இறைவனுக்குப்படைக்கவென்று தாமும் மனைவியாரும் செல்கையில் அம்மையார் தளர்வால் இடறிவிழக் கொண்டுவந்த பொருள்கள் சிந்திப்போயின. அதனைக் கண்ட நாயனர் இன்று நம் திருப்பணி நின்றுபோயிற்றே இனி நாம் உயிர் வாழலாகாது என்று இடையில் சொருகியிருந்த அரிவாளால் தம் ஊட்டியை அரியலுற்றார். இனிமேலும் கருணை வள்ளலாகிய இறைவன் பொறுப்பனே? உடனே ஒரு கைவீசி அவர் கையைப் பிடித்துக்கொண்டதோடு அங்கேயே மாவடுவைக் கறிக்கிற ஒலியை எழுப்பித் தாம் அங்கேயே படைப்பை உண்பதாகக் காண்பித்தார்.

இவருடைய வரலாற்றில் சேக்கிழார் 'அரிவாள் பற்றும் திருக்கையைப் பிடித்தபோது வெருக்கொடு அங்கு ஊறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கி' யென்று கூறுகிறார். அரிவாளைப்பற்றிய திருக்கையை இறைவன் பிடித்துக்கொள்ள அச்சமயத்தில் அவருடைய வெவ்வினை வியந்து நீங்கின என்று தெரிவிப்பதால் இதனையுணர்ந்து நாமும் ஏதேனும் ஒரு நற்செயலை இறைவன் பணியென்ற எண்ணத்தொடு செய்யத் தொடங்கி விட வேண்டும்.

எந்தச் செயலை எப்படித் தொடங்குவது என்பது அடுத்த கேள்வி. திருவள்ளுவர் செயல்களை நன்றாய் வகைப்படுத்தித் திருக்குறளில் கூறியிருக்கிறார். அவற்றில் ஒன்றை மேற்கொள்ளலாம். எப்படிச் செய்வது என்பது அடுத்த கேள்வி. இதற்கு ஒரு பெரியார் துணை இன்றியமையாதது. ஒரு பெரியார் துணை கிடைத்தால் அவர் தெரிவிப்பார் எப்படிச் செய்வது என்று இந்த வகையில் நாம் உய்வோமாக.

# வினைத் தொடர்பு

(முத்துசாமி)

வினையென்பதும் மலங்களுள் ஒன்று. இது நுட்பமாயிருந்து கொண்டு வேலை செய்வது. வினையென்று ஒன்று உண்டென்பதை நுண்ணறிவில் அறிந்து பாராமல் அப்படி ஒன்றும் இல்லையென மறுத்து விடுகின்றனர்.

ஆணவ மலம் இறுதியாக நம்மைவிட்டு நீங்குவது. இந்த மலம் எந்தச் செயல் செய்யினும் நான் செய்கிறேன் என்று நினைப்புத் தோன்றும்படி செய்யும். 'நான் செய்கிறேன்' என்ற நினைப்போடு எந்த வகையான செயல் செய்யினும் அவை வினையாக மாறும். அவை நற்செயல்களாக இருப்பின் புண்ணியம் அல்லது நல்வினை யென்றும் கெட்ட செய்கைகளாக இருந்தால் அவை பாவம் அல்லது தீவினை யென்றும் பெயர் பெறும்.

ஏதேனும் செயல் செய்யும் போது நான் செய்கிறேன் என்ற நினைப்புத் தோன்றச் செய்தால் அவை வினையாகும் என்று கூறினோம். தன்னினைப்பைத் தோன்றச் செய்வது ஆணவ மலம் என்றும் கூறினோம். ஆகவே ஆணவ மலத்தால் வினைகள் முளைக்கின்றன என அறியலாம்.

செயல்கள் (தன்னினைப்போடு) நடைபெறுகிற அந்த வேளையில் அவற்றுக்குச் செயல்கள் என்று தாம் பெயர். பின்னர், காலம் செல்லச் செல்ல அவை வினையாந் தன்மை பெற்று வளரும். வினையாந் தன்மை பெறுதலாவது பின்னர் வந்து தாக்குவதற்கேற்ற வலிவு பெறுதல். தாக்குங்கால் நம்மை அவற்றினியல்புக்கேற்றபடி செயல்படுத்தும். செயல் படுத்துவதால் வினையென்று பெயராயிற்று. வினை நிகழச் செய்கிற ஒன்று வினையெனப் பெயர் பெற்றது. நாளும் நாம் தன்னினைப்போடு செய்கிற செயல்கள் வினையாந் தன்மை பெற்றுச் சேர்ந்து கொண்டே வருகின்றன. இவை புதியவாகச் சேர்வதால் ஆகாமியம் எனப் பெறும். இப்படி ஆகாமியவினை ஏறக் காரணமாக இருப்பது, ஒருபிறவியில் நுகர்ந்து கழிக்கவென்று பெற்று வந்த பிராரத்துவம் என்பது. இனி எத்தனையோ பிறவிகளில் சேர்க்கப்பட்ட வினைகளின் மொத்தமான பெரிய தொகுப்பு சஞ்சிதம் எனப்பெறும். வினைகளை இப்படிப் பாகுபாடு செய்து விளக்கியிருக்கிறார்கள் நம் பெரியோர்கள்.

வினைகள் பின்னர் வந்து தாக்குந் தன்மையுள்ளன என்றோம். எனினும் அவை தாமே வந்து தாக்கா. அவற்றை இயக்க ஒரு முதல்வன் வேண்டும். அவன் தான் எல்லாம் வல்ல இறைவன்.

நாம் செய்த வினைகளை இறைவன் நம் தகுதிக்கும் வலிவுக்கும் ஏற்ப ஒரு முறைப்படுத்தி ஏவுவன். கொடிய வினைகளை இன்ன நேரத்தில் ஏவினால் இவன் தாங்குவனோ என்று கருணையால் எண்ணிப் பார்ப்பன் அவன்; இப்படி முறைப்படுத்தி ஏவப்படுவதால் அவற்றுக்கு முறை யென்னும் பொருள் தரும் விதி, ஊழ், என்னும் பெயர்கள் வந்தன.

வினைகள் ஒத்து வருதல் என்ற ஒரு பக்குவ நிலையை 'இருவினையொப்பு' என்பர். நல்வினையின் தாக்குதல் தன்மையும் தீவினையின் தாக்குதல் தன்மையும் ஒத்த அளவில் வருகிற ஒரு நிலை அது என்று அதனை விளக்குவர். இனி வினைகளை இறைபணியில் கழிக்குமாறு முனைந்தால் அத்தகைய இறைபணிக்கு உதவும் வகையில் ஒத்து வருவன என்று அதனை மேலும் விளக்குவர்.

வினையென்று ஒரு மலம் இருப்பது நல்லதுதான். அது நம்மைச் செயல் படுத்துகிற வேளையில் நமக்கு அறியாமை கழலும். வினை செய்து செய்து அறியாமை கழல வேண்டும். எனினும் வினைகளைப் பெருக்கிக்கொண்டே இருந்தால் நமக்கும் துன்பம். நமக்குப் பிறவிகள் மல்குவதால் அத்தனைப் பிறவியிலும் நேர்கிற பெற்றோர்களுக்கும் துன்பம். இறைவனுக்கும் நாம் பொறுப்பை ஏற்றிய படியுமாம். ஆகவே விரைவில் வினைகளை நுகர்ந்து ஒழித்துவிட வேண்டும். நுகர்வதிலும் அதிக துன்பமிலாதபடி நுகர்ந்து கழித்துவிடவேண்டும். இதற்கு ஒரு வழி தெரிந்தால் நல்லதன்றோ?

ஏதேனும் ஒரு நற்பணியை மேற்கொண்டு அதனை இறைவனுடைய பணியென்று எண்ணித் தொடர்ந்து செய்ய இன்றே தொடங்கி விட வேண்டும். இது தான் அதற்குச் சிறந்த வழி

இவ்வாறு இறைவனுடைய பணியென்ற எண்ணத்தில் ஏதேனும் நற்செயல் செய்து வருகிற வேளையில் நம் வினைகள் அனைத்தும் வந்து எதிர்ப்பட்டு ஒழிந்து

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்:)